அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief
Dr PRIYAKRISHNAN

Publisher
MR P. JAYAKRISHNAN

Editorial Board Members
Dr V SELVAKUMAR
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya
Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy
Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

செவ்வியல் இலக்கியம் - எட்டுத்தொகை 'அகநானூற்றி'ல் அருவி பயன்பாடும் பின்புலமும்

Classical literature — Ettuthogai in 'Akananoortril' Waterfall Application and Background

முனைவர் ர.ஸ்டெல்லா ஜெயஸ்ரீ

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

சுவாமி விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

(பாரதிதாசன் பல்கலைக் கழகம் இணைவு பெற்றது)

வல்லம்-613 403, தஞ்சாவூர் மாவட்டம்.

Abstract

Tamil literature is ancient and proud. Among them, the Sangha literature explains many messages about the terrestrial world. In this research paper, the background messages of Aaruvi in Akananooor and the messages used by the leaders are taken. Not only the internal moral memories of Palantamizhar, but also messages such as leader, leader, pride, memory, wealth and character are embedded. The main purpose of this article is to find out how the waterfall is supported in the messages that resulted in the life of the leader and the leader in this article, which is based on the theme of "Akananoo and its background".

Keywords: *Aruvi, Akananuru, Kalavu Life, Varunanai, Osai, Valam.*

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கியங்கள் தொன்மையும் பெருமையும் வாய்ந்தன. அவற்றுள், சங்க அகஇலக்கியங்கள் நில உலகை பற்றிய பல செய்திகளை விளக்கமாகக் கூறுகின்றன. இவ் ஆய்வுக்கட்டுரையில், அகநானூற்றில் இடம்பெறும் அருவி சொல்லும் பின்புலச் செய்திகளையும், அவற்றால் தலைவன் தலைவியர் பயன்கொண்ட செய்திகளையும் எடுத்தியம்பப்படுகிறது. பழந்தமிழரின் அகவொழுக்க நினைவுகள் மட்டுமல்லாது, தலைவன், தலைவி பெருமை, மறம், வளம், பண்பு போன்ற செய்திகளும் பொதிந்து கிடக்கின்றன. "அகநானூற்றில் அருவி பயன்பாடும் பின்புலமும்" என்ற பொருண்மையில் அமைந்த இக்கட்டுரையில் தலைவன், தலைவி களவு வாழ்வில் விளைத்த செய்திகளில் எவ்வாறு அருவி துணைநிற்கிறது என்பதை கண்டறிவதே கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

கருவிச்சொற்கள்: அருவி, அகநானூறு, களவு வாழ்வு, வருணனை, ஓசை, வளம்.

முன்னுரை

அகநானூறு நூல் பல்வேறு புலவர்களால் இயற்றப்பட்ட நானூறு பாடல்களைக் கொண்டது. மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மனார் இப்பாடல்களைத் தொகுத்தராவார். கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இத் தொகைப் பாட்டிற்கு அடியளவு சிறுமை 13, பெருமை 31 ஆகும். இந்நூலிற்குப் பல அறிஞர்கள் தற்காலத்தில் உரை எழுதியுள்ளனர். தலைவன், தலைவியரிடையே நடக்கும் களவு வாழ்வின் நிகழ்ச்சிகள் பற்றி இங்கு ஆராயப்படுகிறது. எட்டுத்தொகை அகநூல்கள் “அகத்தினின்று எழுகின்ற இன்பியல் வாழ்வின் ஆர்வத் துடிப்புக்களையும் அளவற்ற எண்ணச் சுழல்களையும், அணிபெறக் காட்டுவனவே தமிழரின் அகநூல்கள்” (புலியூர்க் கேசிகன், ப.3) என்று உரையாசிரியர் குறிப்பிடுகின்றார். உலகில் வாழும் மாந்தர் அனைவர்க்கும் உள்ளார்ந்த எண்ண ஓட்டங்கள் அலை அலையாய் எழுந்து பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன. சங்கக் காலத்துத் தமிழ் மாந்தர் தமது எண்ணங்களை ஒழுங்குப்படுத்தி ஒரு வரையறைக்குள் கட்டுப்படுத்தி வாழ முற்பட்டதன் விளைவே நாகரிகத்தின் தொடக்கம் எனலாம். 'அகம்' என்னும் பெயர் அமைந்த பழைய இலக்கிய நூல் அகநானூறு ஒன்றேயாகும்.

அகம் பற்றிய எட்டுத்தொகை நூல்களுள் நீட்சி உடையதாகையால் 'நெடுந்தொகை' எனவும் வழங்குகிறது. அகநானூறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பகுதியான களிற்று யானை நிரை (1-120) முதல் நூற்றுஇருபது பாடல்களைக் கொண்டது. அடுத்த பகுதியான மணிமிடைப் பவளம் (121-300) அடுத்த நூற்று எண்பது பாடல்களைக் கொண்டது. இறுதி பகுதியான நித்திலக் கோவை (301-400) இறுதி நூறு பாடல்களைக் கொண்டது. பாடிய புலவர் நூற்று நாற்பத்தைவர். இந்நூலைத் தொகுபித்தோன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி.

தித்தன், நன்னன், பிட்டன், பண்ணன் கோசர், மோரியர், பாரி, காரி, செழியன், அத்தி, கங்கன், கட்டி, புல்லி முதலியவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை அகநானூற்றில் காணலாம். நல்ல உவமைகளும் உள்ளுறைப் பொருள்களும் ஆங்காங்கே விரவி வரக் காணலாம்.

அகநானூற்றில் களவு வாழ்வு

அகத்துறையில் தோழி அறத்தொடு நின்றுபேசும் பேச்சுக்கள் தமிழ்ப் பண்பாட்டின் தனித்தன்மையைக் காட்டுவன. அரிய நயமிக்க செந்தமிழ்த் தொடர்களை அகநானூற்றின் மூலம் தொடுத்துக் காட்டுகிறார். மெய்யின் நிழல் போலத் திரண்ட ஆயத்தோடு விளையாடி

மகிழ்வேன் என்று 49 ஆம் பாடலில் குறிப்பிடுகிறார் வண்ணப் புறக் கந்தரத்தனார் என்னும் புலவர்.

செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போல,
கோதை ஆயமொடு ஓரை தழீஇத்,
தோடுஅமை அரிச்சிலம்பு ஒலிப்ப, அவள்
ஆடுவழி ஆடுவழி, அகலேன் . . . . (அகம்.49:15-18)

மெய் - உண்மை அவரவர் நிழல் அவரவரை விட்டுப் பிரியாது அதுபோல தலைவியை விட்டுப் பிரியாத தோழியரோடு தலைவி விளையாடியதை எண்ணி மகிழலாம்.

அருவி வருணனை

தலைவனின் நெடியமலை உச்சியினின்று வழிகின்ற தெளிந்த நீரையுடைய வெண்பட்டு போன்ற அழகிய வெள்ளிய அருவியில் நீராடுவதனைக் *குறிஞ்சிப்பாட்டு* குறிப்பிடுகிறது.

அவிர்துகில் புரையு மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா (அடி.55-56 உரை, ப.50)

என்ற அடிகள் விளக்குகின்றன.

மேலும், அந்த அருவியில் நீங்காத வெப்பம் உடையவராய் இடையராது விளையாடிப் பளிங்கைக் கரைத்துச் சொரிந்து வைத்தது போன்று பரவிய சுனையைக் குடைந்தாடும் பொழுது செரிவுடைய மலையில் "பொன்னில் அழுத்திய நீலமணிபோல் முதுகில் கிடந்த கூந்தலை ஈரம் உலரச்செய்து சிவந்த கண்களை உடையவள்" தலைவி.

பளிங்கு சொரி(வு) அன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பின் பாயம் பாடி. **(குறிஞ்சிப்பாட்டு, அடி.57-58 உரை, ப.50**

என்ற அடிகள் பரந்த சுனையைக் கூறுகின்றது. சுனை — மலையூற்று என்பதாம்.

அருவியின் நிலைப்பாடு

தலைவன் தொலைவிலுள்ள நாட்டுப் பொன்னணிகள் ஆகிய செல்வங்களைத் தேடிச்செல்லும் வழியில் தரையெங்கும் வெடிப்புக்கள் ஏற்படுமாறு, வெம்மையான கதிரவனின் நெருப்பினைப்போல எங்கும் பசுமையற்றுப் போகுமாறு எரித்தலினால், தம் நிழல் தேய்ந்து உலறிப்போன மரங்களை உடையது. பாறைகளும் கொதிக்கும் படியாக நீரற்றுப்போன பசுஞ்சுனைகள், நீர்ப்பசையே அற்றுக் காய்ந்து போனதனால், சொரிந்த நெல் பொரியாகப் போகும் அளவுக்குக் கொடிய வெம்மையினையும் கொண்டது. யாவரும் இவ்வழியாக வருபவர்கள் அதிகமாக இல்லை. கரையிலே மோதி உடைந்து அலைகள்

பொங்கிச் சிதறுவதைப் போலக் கிடக்கும் கடல் முகப்புப் போல, அக்காட்டின் முகப்பு தோன்றுகின்றது என்பதைப் பின்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றது.

நிழல்தேய்ந் துலறிய மரத்த அறைகாய்
பறுநீர்ப் பைஞ்சுனண ஆமறப் புலர்தலின்
உகுநெற் பொரியும் வெம்மைய யாவரும்
வழங்குநர் இன்மையின், வௌவுநர் மடியச்
சுரம்புல் லென்ற ஆற்ற அலங்குசினை (அகம்., பா.1:11-15, ப.11)

என்ற பாடலடிகள், காதலன் பிரிந்து சென்றதனால் துயரத்தில் இருந்த தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறும் செய்தியினை வலியுறுத்துகிறது. "யான் வாடக் (அகம். - களிற்றியானை நிரை, ப.11), காடு கடந்து செல்வந்தேடச் சென்றவர், முன், தாம் சொன்ன 'பிரியலம்' என்ற தம் உறுதிச்சொல்லையும் மறந்து கூறினரே'' (மேலது., பா.1:6 உரை, ப.11)எனத் தலைவி வருந்தந்தோய்ந்து தோழிக்குக் கூறுகிறாள்.

இயற்கை வருணனை (பின்புலம்)

சங்க இலக்கியப் பாடல்களில் இயற்கையைப் பற்றிய அறிவும் தெளிவும் மேலோங்கியுள்ளது. இயற்கையின் பல்வேறு நிலைகளை மக்களின் இன்பத்திற்கும், துன்பத்திற்கும் பின்புலமாகவே வைத்துப் புலவர்கள் பாடியுள்ளனர். இயற்கையை இயற்கையாகவே பாடும்நிலை சங்க காலத்தில் இல்லை. இயற்கை விளிப்பாடல்கள் சில சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. இயற்கைக் காட்சிவழி உள்ளுறை போன்ற கருத்து விளக்கம் அமைந்திருக்கும் அவையாவும் மக்கள் வாழ்வினை விளக்கும் பின்புலமாகவே விளங்குகின்றன.

அருவிநீர் வளமும் பயன்பாடும்

அருவிநீர் மலைகளுடன் இணைந்தது. மலை உச்சியிலிருந்து கீழ்நோக்கி ஓடிவரும் நீர். மலையடிப் பகுதியிலுள்ள விளைநிலங்களுக்கு அருவிநீர் மிகுந்த பயன் அளிக்கின்றது. இதன்வழி நெல், கரும்பு, வாழை முதலான பயிர்களும், ஆம்பல், தாமரை முதலான மலர்களும் பூத்து விளைகின்றன. மலைப் பகுதியிலுள்ள மரங்களுக்கும் செடிகட்கும் உணவாக அருவிநீர் பயன்படுகிறது. சங்க இலக்கியங்களில் பெரும்பகுதி மலையருவிகள் பற்றிப் புனையப்படடுள்ளன. இயற்கை வளத்தை அறிவிக்கின்றன அவை.

அருவியின் தோற்றத்தைச் சங்க இலக்கியங்கள் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன. எழுந்துவீழருவி (நற்.,பா.228:9), தூவெள்ளருவி (குறுந்., பா.235:2), வெள்ளருவி (பதிற்.,

பா.78:2), வயங்குவெள் அருவி (அகம்.-மணிமிடை பவளம், பா.202:1) போன்ற தொடர்கள் குறிக்கத்தக்கன. மேலும், அருவி பற்றி வரும் உவமைகளையும் பொருள் விளக்கத்தையும் மு.வரதராசனார்,

> **“வெள்ளருவியின் தோற்றம் தூய வெள்ளை ஆடை போன்றிருப்பதாக வருகின்றது ஓர் உவமை. கடல் அலை, யானை மீது பிடிக்கப்பட்ட வெற்றிக்கொடி, பாம்பு உரித்த தோல், கடலில் எழும் மதியம் ஆகியவற்றையும் அருவிக்கு உவமை கூறியுள்ளனர்” (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.219)**

எனக் குறிப்பிடுகின்றார்.

மலையிலிருந்து இழிதரும் அருவி பலவித ஓசைமிகு ஒலிகளை எழுப்புகின்றன. இரவும் பகலுமாய் அவை ஒலியெழுப்பி ஓடி வருகின்றன. இழி, இழிதல் — இறங்கு, இறங்குதல் என்பதாம் (மு.சண்முகம் பிள்ளை, ப.136). உயரமான மலைச் சிகரத்திலிருந்து அருவிநீர் இறங்குதல் என்பது கருத்து.

அருவி என்பதற்கு ‘‘மலையிலிருந்து இழிதரும் நீர்க்கால்’’ (இரா.சாரங்கபாணி, தொ.1, ப.75) எனச் *சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்* பொருள் கூறுகிறது. இதற்கு விளக்கமாகப் புறநானூற்றுப் (பா.105:4-6) பாடற்பகுதிக்குரிய பொருளை எழுதி இந்நூல் பொருண்மைப்படுத்துகிறது.

> **‘‘மழை பெய்யினும் பெய்யாவிடினும் பாரி பறம்பில் அருவி மலைச் சிகரந்தோறும் இறங்கிக் கொள்ளினுக்கு உழுத நிலத்திடை நீரோடுகளாக ஓடும்’’**
> (இரா.சாரங்கபாணி, தொ.1, ப.75)

என்பது *சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்* தரும் சான்று. மலைச் சிகரத்திலிருந்து இறங்கிவரும் அருவி என்பது இங்கு எண்ணத்தக்கது. இனிச் சங்க இலக்கியங்களில் வரும் அருவிகளின் நீர்ப் பெருக்கையும் அதன் பயன்பாட்டையும் ஒரு சிலவற்றை காணலாம்.

மணியென இழிதரும் அருவிப் பொன்னென
வேங்கை தாய ஏங்குமலை அடுக்கத்து (நற்., பா.28:5-6)

என்பதில் அருவியின் நீர்ச் சிறப்புக் குறிப்பிடப்பட்டுள்ளமை எண்ணத்தக்கது. மணியென அருவி — மணி போலத் தெளிந்த நீரையுடைய அருவி எனப் பொருள் கூறப்படுகிறது (ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, பகுதி-1, ப.167). அருவி இறங்கும் வழியெல்லாம் வேங்கைப் பூக்கள் சிதறிக் கிடந்தன.

மலையைத் திருமாலின் நிறத்திற்கும் அதன்வழி ஓடிவரும் (இறங்கும்) அருவியைப் பலராமன் நிறத்திற்கும் ஒப்பிட்டு, அருவி நீரின் தூய்மையை நற்றிணைப் பாடல்,

மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோ னன்ன வயங்குவெள் ளருவி
அம்மலை கிழவோன் நந்நயந் தென்றும்
வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய் (பா.32:1-4)

என்று அருவி வெண்மையாக உள்ளதை வெள்ளருவி எனச் செய்யுளடி விளம்புகின்றது. இதற்கு உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி,

"மாயோனைப் போன்ற பெரிய மலைப்பக்கத்து அவன் கண்ணனாய் அவதரித்தபொழுது அவனுக்கு முன்னவனாகத் தோன்றிய வெளிரிய நிறத்தையுடைய பலராமனைப் போன்று விளங்கிய வெண்மையான அருவிகளையுடைய அழகிய மலைக்குரிய தலைவன்" (பா.32 உரை, ப.42)

என்று குறிப்பிடுகின்றார். புராணச் செய்தியைக் கூறி அருவியின் வெண்மைத் தன்மை கூறப்பட்டது உயர்வு நவிற்சி. அருவிகள் மிகுந்த ஒலியெழுப்பிக் கொண்டு வரும் என்பதை "*பெருவரை யடுக்கத்து அருவி யார்ப்ப*" (நற்., பா.7:2) எனக் கூறப்படுகிறது. புதுப்புனல் வந்தமையால் அதனைக் கண்டு உழவர்கள் மகிழ்ச்சிபொங்க ஆடிப்பாடிவர். அப்படி பாடுவதனால் உண்டாடும் ஓசையும், நீர் மதகிலே தேங்கிச் செல்லுதலால் உண்டாகும் ஓசையையும், குறிப்பிடும் இளங்கோவடிகள் "*உழவரோதை மதகோதை*" ("7.கானல்வரி", பா.1-4, ப.189) என்கிறார்.

நற்றிணையைப் போலவே குறுந்தொகையிலும் அருவிகளின் நீர் வளம் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நள்ளிரவில் பெய்த மழையால் மலை முகடுகளின் வழியே நீர் சேர்ந்து அருவியில் கொட்ட, அருவியின் நீரளவு மிகுந்து பலத்த ஓசையுடன் ஓடிவரும் (குறுந்.42:2-3). மேலும் கூத்தர்கள் ஒலி எழுப்பப் பயன்படுத்தும் முழவின் ஓசையைப் போல ஒலி எழுப்பி அருவி மலையுச்சியிலிருந்து ஓடிவரும் (குறுந்.78:1-3). தலைவன் அருவிகள் கொட்டும் மலைகளுக்குரியவன் என்று சிறப்புத் தந்து குறுந்தொகை பல இடங்களில் குறிப்பிடுகின்றது. எடுத்துக்காட்டாக "*ஒளி வெள்ளருவி ஒங்குமலை நாடன்*" (குறுந்.88:1) என்பதைக் குறிப்பிடலாம். அருவிகள் மலையிலிருந்து தரையைக் கடக்கும் போது மக்கள் பயன்படுத்தும் நீருண் துறைகள் உள்ளன. மலை உச்சியில் இருக்கும் கனிந்த பலாப்பழத்தை அருவியில் குரங்குகள் தள்ளிவிட அவை நீருண் துறைக்கு வரப் பயன்படும் (குறுந்.90:4-6). குரங்குகளுக்குப் பயன் விளைக்க அருவி நீர் பயன்படுகிறது.

அருவி நீரைப் பயன்படுத்தி மக்கள் மலை நெல்லை விதைப்பர். இது நேரடியாக நிலத்திற்குப் பயன்படுவது.

அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பருவிலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்
கடுங்கண் வேழத்து கோடுநொடுத் துண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற் கரிய பணைப்பெருந் தோளே (குறுந்.100)

தலைவன் கூற்றாக வரும் இப்பாடல், தலைவியின் சிறப்பையும் ஊர்ச் சிறப்பையும் மலை அருவியின் பயனையும் குறிப்பிடுகிறது. "*அருவிப் பரப்பின் ஐவனம் வித்தி*" என்பது அருவி நீர், பாயும் நிலப்பரப்பில் மக்கள் மலை நெல்லை (ஐவனம்) விதைத்துப் பயன்பெற்றனர் என்ற அருவியின் பிறிதொரு பயனைச் சுட்டுவது இத்தொடர். மலையின்கண்ணே மலை நெல்லை விதைத்தனர் என்கிறார் பொ.வே.சோமசுந்தரனார். "மலையின்கண் அருவி பாயும் நிலப்பரப்பின்கண் ஐவனம் வித்தி என்க" (பா.100 உரை, ப.189) என்பது அவர் கூற்று. மேலும் மற்றொரு பாடலில்

கல்பொருது இரங்கும் கதழ்வீழ் அருவி
நிலங்கொள் பாம்பின் இழிதரும் (குறுந்., பா.134:5-6)

என்பது மலையிலிருந்து கீழ்நோக்கி (நீர் இறங்குதல்) வரும் அருவி நிலத்தைக் கடந்ததையும் அது பாம்புபோல் வளைந்து வளைந்து சென்றதையும் உணர்த்துகிறது. நிலத்தில் பாம்புபோல் அருவி சென்றதற்குக் காரணம் மலைகள் ஒன்றொடொன்று குறுக்கிட்டுக் கிடந்ததாம் (மேலது., பா.134 உரை, ப.247).

ஆய்வுக் கட்டுரையின் மையப் பொருண்மையாகிய அகநானூற்றில் பற்றி இனிக் காணலாம். காட்டாறுகள் மிகுந்த நாடு உயரமான நீண்ட மலைகளிலிருந்து அருவிநீரும் பாய்தலால் நீர்வளம் பெற்றிருந்தது (அகம்., பா.22:1-2). உயர்ந்த மலைகள் இழிதரும் (இறங்கி ஓடிவரும் நீர்) பல அருவிகளைக் கொண்டதாகவும் விளங்கிற்று.

அயவெள் அருவி சூடிய உயர்வரைக்
கூஉம் கண்ஃது எம்ஊர் என
ஆங்குஅதை அறிவுறல் மறந்திசின், ... (அகம்., பா.38:16-18)

எனும் செய்யுளடிகள் தோழி தலைவியின் ஊர்ச் சிறப்பைக் கூறுவதாக அமைந்துள்ளது. அஃதாவது,

"சுனையிலிருந்து வரும் வெள்ளிய அருவிகளைத் தன் உச்சியிலே கொண்டிருக்கும் உயர்ந்த மலையில் கூப்பிடு தூரத்தில் உள்ளதே எம்முடைய ஊர்" (புலியூர்க் கேசிகன், பா.38 உரை, ப.90).

எனத் தோழி தலைவியிடம் தலைவன் சிறைப்புறத்தானாக கூறுகிறாள். இது எம்மூர் என்று தன்னையும் தலைவியையும் இணைத்துத் தன்மைப் பன்மையில் தோழி கூறுகின்றாள். மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் அவசியம் தேவையானது நீர் ஆகும். இத்தகைய அரிய பொருளைக் கொண்டு வந்து சேர்க்கும் அருவிகள் பெரிதாகப் போற்றப்படுவதற்கு இது அடிப்படையாகும்.

அருவிகள் மலை உச்சியில் தோன்றினாலும் நிலத்தில் வந்து சேருங்கால் மக்கள் பயிரிடும் தோட்டத்திற்கும் நிலங்களுக்கும் பாய்ந்து அங்குள்ள நிலத்தை ஈரப்படுத்திவிட்டுச் செல்கிற தன்மை அவைகளுக்கு உண்டு. களவு வாழ்வில் நிகழும் ஒரு சுவையான நிகழ்வு: தாய் உறங்கி விட்டனளா! என அறிந்து வந்து தலைவிக்கு, இரவுக்குறிக்கண் வந்த தலைவனைச் சந்திக்கக் காத்திருக்கும் தலைவியிடம் நீ செல்லலாம் எனக் கூறுகிறாள் தோழி.

அன்னாய் வாழி, வேண்டு அன்னைநம் படப்பைத்
தண்அயத்து அமன்ற கூதளம் குழைய
இன்இசை அருவிப் பாடும் என்னதூஉம்
கேட்டியோ வாழி, வேண்டு அன்னைநம் படப்பை (அகம்., பா.68:1-4)

என்பது அகநானூறு. தோட்டத்திலே உள்ள குளிர்ந்த பள்ளத்திலே, நிறைந்திருக்கும் கூதளஞ் செடியின் தழைகளின்கண்ணே, அவை குழையுமாறு வீழ்கின்ற, இன்னிசையான அருவியொலியினைச் சிறிதேனும் நீ கேட்டாயோ அப்படியும் அன்னை உறங்குகின்றனள் என்கிறாள். படப்பை — தோட்டம் என்பதாம். அருவிநீர் வீழ்ந்து எழுப்பும் ஒலி பின்புலமாகக் அமைகின்றது. இதன்வழி அருவியின் நீர்போக்குத் தெரிகிறது. அறியா மரம்பயில் காட்டின் இடையே அருவி உட்புகுந்து ஓடியது (அகம்.92:8-13).

ஓசை

பொதியமலையின் உச்சியினின்றும் இழிதரும் அருவிபோல இன்னியம் ஒலிக்கும் (அகம்., பா.138:7-9). சேரனுடைய குழூமூர்ச் சமையற்கட்டில் எழும் ஓசைபோலப் பெரிய மலைப்பக்கத்து அருவியின் ஒலி விளங்கும் (அகம்., பா.168:5-8). பூக்கள் நிறைந்து, அருவி ஒலித்துவிழும் சுனையினையுடைய பக்க மலையில், நீர்த்திவலைகள் புதரினை நனைக்கும் (அகம்., பா.262:13-15). தலைவியின் உடனிருக்கும் தோழி, தலைமகள் கேட்குமாறு,

"குணகடல் முகந்த வானம் நள்ளிரவில் தலைவனது மலையில் மழை பொழிந்தால் இலங்கும் அருவி பரந்து மூங்கில் தண்டு வளையத் தீண்டி ஓடிவரும் போது நம்மூர் முன்துறையில் மழைக்கண் சிவப்ப மூழ்கித் திளைக்கலாம்" எனத் தலைவன் சிறைப்புறமாகத் தலைவிக்குத் தோழி கூறுகிறாள் (அகம்., பா.278). தலைவியின் செயல்பாடுகளுக்குத் தக்கதொரு துணைபுரிந்து பயன் விளைக்கிறது.

இரவில் ஆலங்கட்டியோடு கனத்த மழையும் பொழிந்தது. அதனால் அருவி நிறைந்து ஓடியது. நீர் குறைவற்றதாகக் காணப்பட்டது. பருவ மாற்றங்களால் அருவி நீரோ அல்லது நிலத்தடி நீரோ குறைந்தால் பழங்காலத்தில் மழை நீரையே எதிர்பார்த்திருந்தனர். சில தருணங்களில் மழையின்றி மண் வறண்டாலும் அருவிகள் குறையாது நீர் வளம் தந்தன. தற்காலத்தில் நவீன முறையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதுவும் நிலத்தடி நீரைக் குறைக்கும் என்பர்.

> "தமிழகத்தின் பல மாவட்டங்களில் இருந்து பிழைப்புத் தேடி மக்கள் இங்குக் குடியேறுவதும் (சென்னையை ஒட்டிய காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள்) தொழிற்சாலைகள் பெருகுவதும் தண்ணீர் சுரண்டப்படக் காரணமாகின்றன. தென் மாநிலங்களில் ஆந்திராவில் மட்டும்தான் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்திருக்கிறது. நாம் ஆழ்துளைக் கிணறு மூலம் தொடர்ந்து நீர் சுரண்டுவதால் நம் வருங்காலத் தலைமுறையைத் தவிக்க விடுகிறோம் என்பதை உணர வேண்டும் என்று அறிவுரை வழங்கப்படுகிறது. மழை நீரைச் சேமித்து நிலத்தடி நீரைக் குறைவாகப் பயன்படுத்தி வருங்கால சந்ததியினருக்கு வளமான பூமியை விட்டுச் செல்ல வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது" (எடையூர் சிவமதி, ப.31.[1]

என்று ஆய்வாளர் சிவமதி தம்முடைய நமது பூமி நூலில் குறிப்பிடுகின்றார். இத்தகைய பாதிப்புகள் அருவிகளுக்கும் ஏற்படுகின்றன. சங்க இலக்கியங்களிலும் அருவியிலும் நீர் வறட்சி ஏற்படுவது குறிக்கப்பட்டிருக்கின்றது.

முடிவுரை

காதல் வாழ்வு என்பது தன்முனைப்பு நீக்கப்பெற்ற பக்குவம் பெற்ற சால்பு நிறைந்த வாழ்வையே பெரும்பாலும் பாடுப்பொருளாய் சங்க அகஇலக்கியங்கள் அறியச் செய்கின்றன. உலகில் வாழும் மாந்தர் அனைவருக்கும் நீர் அவசியமான ஒன்று. இந்த நீர் மலை உச்சியினின்று வீழுகின்ற காட்சிகள் தலைவன்-தலைவிக்கு துணையிருப்பதாக அவர்களின் காதல் நிலைக்கும் தன்மையை மதிப்பீடு செய்வதாக அறியமுடிகின்றது. மலையிலிருந்து இழிதரும் நீர் அருவிகளாய் மக்களின் தேவையான உணவு உற்பத்திக்குப் பயன்படும் விதம்

புலவர்களால் புனையப்பட்டுள்ளன. அருவிகள் எழுப்பும் ஒலி ஒப்புமை காட்டப் பயன்படுகிறது. மழை பெறாத காலத்து விளங்கும் அருவிகளின் காட்சிகள் தலைவியைப் பிரிந்த தலைவன் மீள வராத சூழல் ஒப்புமை காட்டப் பின்புலமாகப் பயன்படுகிறது. மலைகளின் உச்சிகளிலிருந்து கீழ்நோக்கி ஓடிவரும் அருவிகளின் அழகுணர்ச்சி வெள்ளருவி எனும் வெண்மைத் தன்மைப் பற்றிப் புலப்படுத்துகிறது.

துணைநூற் பட்டியல்

இளம்பூரணர் (உ.ஆ.). *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* சாரதா பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு, 2005.

கௌமாரீஸ்வரி (ப.ஆ.), *இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் மூலமும் ந.மு.வேங்கடசாமி நாட்டார் எழுதிய உரையும்,* ராமையா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2005.

சண்முகம் பிள்ளை, மு. (தொ.ஆ.). *தமிழ்-தமிழ்-அகர முதலி,* தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, 4 ஆம் பதிப்பு, 2022.

சிவமதி, எடையூர். *நமது பூமி,* கிளாசிக் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2017.

சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.), *குறுந்தொகை,* திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 2007.

தமிழண்ணல் (உ.ஆ.). *குறுந்தொகை.* கோவிலூர் மடாலயம், கோவிலூர், ஏப்ரல், 2002.

நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் (உ.ஆ.), *நற்றிணை நானூறு மூலமும் உரையும், பகுதி-1,* சென்னை, கழக வெளியீடு, மறுஅச்சு 2007.

புலியூர்க் கேசிகன் (உ.ஆ.), *அகநானூறு (மணிமிடை பவளம்) தெளிவுரை,* பாரி நிலையம், சென்னை, முதற் பதிப்பு, 1960.

புலியூர்க் கேசிகன் (உ.ஆ.), *சங்க இலக்கியம் எட்டுத்தொகை: பதிற்றுப்பத்து,* சாரதா பதிப்பகம், சென்னை, 5 ஆம் பதிப்பு, 2019.

புலியூர்க் கேசிகன் (உ.ஆ.). *அகநானூறு (களிற்றியானை நிரை).* அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 1960.

மார்க்கபந்து (உ.ஆ.), *குறிஞ்சிப்பாட்டு மூலமும் உரையும்.* முல்லை நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 2016.

வரதராசனார், மு., *பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை,* பாரி நிலையம், சென்னை, 2 ஆம் பதிப்பு, 1979.

References

Ilampooranar (Ed.). *Tholkappiyam Porulathikaram.* Saratha Pathippagam, Chennai, First Edition, 2005.

Gowmariswari (Ed.). *Ilangovadigal Iyatriya Silappathikaram Moolamum Na.Mu.Venkadasamy Nattar Eluthiya Uraiyum,* Ramaya Pathippagam, Chennai, First Edition, 2005.

Shanmugam Pillai, M. (Ed.). *Tamil-Tamil-Agara Mudhali,* Tamilnadu Padanool Matrum Kalviyiyal Panigal Kazhagam, Chennai, 4th Edition, 2022.

Sivamathi, Edaiyur. *Namathu Boomi,* Classic Publications, Chennai, 2017.

Somasundaranar, Po.Ve. (Ed.). *Kurunthogai,* Thirunelveli, Thenninthiya Saivasiddhantha Noorpathippu Kazhagam, Limited, Chennai, 2007.

Tamilannal (Ed.). *Kurunthogai.* Koviloor Madalayam, Koviloor, April, 2002.

Narayanasamy Iyer, Pinnathoor (Ed.), *Natrinai Nanooru Moolamum Uraiyum, Part-1,* Chennai, Kazhaga Veliyeedu, Reprint 2007.

Puliyur Kesikan (Ed.), *Agananooru (Manimidai Pavalam) Thelivurai,* Pari Nilayam, Chennai, First Edition, 1960.

Puliyur Kesikan (Ed.), *Sanga Ilakkiyam Ettuthogai: Pathitrupathu,* Saratha Pathippagam, Chennai, 5th Edition, 2019.

Puliyur Kesikan (Ed.), *Agananooru (Kalitriyanai Nirai).* Aruna Publications, Chennai, First Edition, 1960.

Markabandu (Ed.), *Kurunjipattu Moolamum Uraiyum.* Mullai Nilayam, Chennai, First Edition, 2016.

Varatharanasar, M., *Palanthamil Ilakkiyathil Iyarkai,* Pari Nilayam, Chennai, 2nd Edition, 1979.

ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com